**சென்னை மாவட்டம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி**
**கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**ந.க.எண்.123/ Learning Outcomes - பயிற்சி/ஒபக/2022 நாள். .01.2022**

**பொருள்** ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி –சென்னை மாவட்டம்– 2021–22ம் ஆண்டிற்கான – பயிற்சி – தொடக்க, நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கான கற்றல் அடைவுகளை மாணவர்களுக்கு அடையச் செய்வதற்கான திறன் வலுவூட்டல் இரண்டாம் கட்டப் பயிற்சி வழங்குதல் – சார்பு

**பார்வை** பள்ளிக் கல்வி ஆணையரின் செயல்முறைக் கடித ந.க.எண்.001737/பிடி1/இ2/2022 நாள்.06.01.2022

******

பார்வையில் காணும் செயல்முறைகளுக்கிணங்க தமிழ்நாட்டிலுள்ள தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலுள்ள ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கான பாடவாரியான, மாநிலப் பாடத்திட்டத்திற்கான கற்றல் அடைவுகள் (Learning Outcomes) மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் வரையறுக்கப்பட்டு அதனை மாணவர்களுக்கு அடையச் செய்வதற்கான கற்பித்தல் முறைகள் குறித்தும் ஏற்கெனவே பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் இது சார்ந்து ஆசிரியர்களுக்குள்ள சந்தேகங்களை நிவர்த்தி **செய்யும்** பொருட்டும், ஒவ்வொரு பாடத்திற்கான கற்றல் அடைவுகளை எங்ஙனம் மாணவர்களுக்கு அடையச் செய்வது என்பது குறித்து தெளிவான புரிதலை ஏற்படுத்திக் கொள்ள ஏதுவாக தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஒன்று முதல் பத்தாம் வகுப்பு வரைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவருக்கும் கற்றல் அடைவுகள் சார்ந்த வலுவூட்டல் பயிற்சி வழங்குவது இன்றியமையாததாகிறது.

முதற்கட்டமாக 08.01.2022 அன்று மாவட்ட அளவிலான கருத்தாளர்களுக்கான பயிற்சி இணைய வழியில் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் உயர் தொழில் நுட்ப ஆய்வகத்தில் (Hi –Tech Lab) நடைப்பெற்றது. இதனைத் தொடர்ந்து 6ம் வகுப்பு முதல் 9ம் வகுப்பு வரை பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கு இரண்டாம் கட்ட பயிற்சி 03.02.2022 முதல் நடத்தப்பட உள்ளது. எனவே, 6ம் வகுப்பு முதல் 9ம் வகுப்பு வரை பயிற்றுவிக்கும் ஆசிரியர்களை இணைப்பில் காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு அந்தந்த பள்ளிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பயிற்சி மையங்களில் தவறாமல் பாடவாரியாக இப்பயிற்சியில் கலந்துகொள்ள ஆசிரியர்களை பள்ளித் தலைமையாசிரியர்கள் பயிற்சி நாளன்று பணிவிடுப்பு செய்து அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**நேரம் காலை 9.30.மணி முதல் 4.30 மணிவரை**

**இணைப்பு**

1. பாட வாரியாக கருத்தாளர்கள் பெயர் பட்டியல்
2. பள்ளிவாரியாக பயிற்சி மையங்கள்
3. பயிற்சி கால அட்டவணை

இரா. சி. [illegible] 31/1/22

for மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர்
மற்றும் முதன்மைக் கல்வி அலுவலர்
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி
சென்னை மாவட்டம்

31/1/2022

பெறுநர்,

1. தலைமையாசிரியர், அரசு/சென்னை / ஆதிந உயர் / மேல் நிலைப் பள்ளிகள், சென்னை மாவட்டம்
2. அனைத்து வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள்(பொ), சென்னை

நகல்:

1. துணை ஆணையர் ( கல்வி) சென்னை பெருமாநகராட்சி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. கல்வி அலுவலர் சென்னை பெருமாநகராட்சி அவர்களுக்கு தொடர் நடவடிக்கைக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.
3. அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்களுக்கு தொடர் நடவடிக்கைக்காக அனுப்பப்படுகிறது.
4. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள் சென்னை மாவட்டம்.